**15.08.2020**

## Press Release

## 74th Independence Day Celebrated at Chennai Metro Rail Limited

Chennai Metro Rail Limited celebrated the 74th Independence Day of India on 15 August 2020. Thiru Pradeep Yadav, I.A.S., Managing Director, CMRL hoisted the National Flag and accepted the parade salute in CMRL Administration Building at Koyambedu.

On the occasion of Independence Day Celebration, to encourage sportsmanship among fellow colleagues, sports competitions for Chess, Carrom, Badminton, Tennis and Brisk Walk (Men & Women) were conducted for CMRL Officials and Staff in which several officers and staff participated and the prizes for 45 officials and staffs were distributed by MD,CMRL.

Tmt. Sujatha Jayaraj (Director Finance), Thiru Rajeev Narayan Dwivedi Director (Projects) and (S&O) Incharge, Officials and Staffs of CMRL participated in the event maintaining social distancing.

**15.08.2020**

## பத்திரிக்கை செய்தி

## சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் 74வது சுதந்திர தின விழா கொண்டாடப்பட்டது

இந்தியத் திருநாட்டின் 74வது சுதந்திர தின விழா இன்று (15.08.2020) கோயம்பேட்டில் உள்ள சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அலுவலகத்தில் நடைபெற்றது. சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப அவர்கள் தேசியக் கொடியை ஏற்றிவைத்து அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார்.

சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் போது சக ஊழியர்களிடையே விளையாட்டுத் திறனை ஊக்குவிப்பதற்காக சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு செஸ், கேரம், பூப்பந்தாட்டம், டென்னிஸ் மற்றும் சுறுசுறுப்பான நடை (Brisk Walk) ஆகிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது. இதில் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டனர். இந்த போட்டிகளில் வெற்றி பெற்ற 45 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு, சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், திரு. பிரதீப் யாதவ், இ.ஆ.ப., அவர்கள் பரிசுகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனத்தின் இயக்குநர்கள் திருமதி. சுஜாதா ஜெயராஜ் (நிதி), திரு. ராஜீவ் நாராயண் திவேதி (திட்டங்கள்) மற்றும் (இயக்கம் மற்றும் அமைப்புகள்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் தனி மனித இடைவெளியை கடைபிடித்து பங்கேற்றனர்.